# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 368/2018

### அ.சா.10 (LW 26 )

| பெயர் | C.B. விக்னேஷ் | தொழில் | மருத்துவர் |
|---|---|---|---|
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 04.08.2025 |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 வது எதிரி ஆஜர்.

2,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஊட்டி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நீலகிரியில் குழந்தைகள் நல பிரிவில் உதவி பேராசியராக வேலை செய்கிறேன். கடந்த 04.06.2018 அன்று திண்டுக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் நான் பணியிலிருந்த போது காலை 11.20 மணிக்கு மோகன்ராஜ் ,21 வயது ஆண் என்பவரது பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அம்மையநாயக்கனூர் காவல் ஆய்வாளர் தலைமை காவலர் 490, ஞானசேகர் அவர்களிடம் கொடுத்தனுப்பிய வேண்டுகோள் கடிதத்தை பெற்று கடித எண்.173 /2018 நாள். 04.06.2018 அங்க மச்ச அடையாளங்களை தலைமை காவலர் என்னிடம் அடையாளம் காட்டினார். பகல் 12.00 மணி அளவில் நான் உடற்கூராய்வு செய்ய ஆரம்பித்து பகல் 02.00 மணிக்கு முடித்தேன்.

பிணத்தின் தன்மை

பிரேதத்தில் விரைப்பு தன்மை காணப்பட்டது. மிதமான வளர்ச்சி அடைந்த ஆண்பிரேதம் ஒத்த பரிமாணத்துடன் மல்லாந்த நிலையில் இருந்தது. கண் விழி திறந்திருந்தது. நாக்கு உள்ளேயிருந்தது. பற்கள் 8/8/8/8 காணப்பட்டது. வயிற்று உள்உறுப்புகள் வயிற்றின் காயத்தின் வழியே வெளியே வந்த நிலையில் இருந்தது.

<u>வெளிப்புற காயங்கள்.</u>

1) குத்து காயம் 3X2X1 செ.மீ அளவில் இடது மார்பில் நெஞ்சு பகுதியில் மார்பு காம்பிலிருந்து 7 செ மீ கீழே காணப்பட்டது.

2) கத்தி குத்து காயம் 3X2X15 செ.மீ இடது பக்க மார்பு பகுதியில் இடது பக்க நெஞ்சு கூட்டுப்பகுதியின் கீழ் பகுதியில் காணப்பட்டது.

3) கத்தி குத்து காயம் 3X2X1 செ.மீ அளவில் இடது பக்க நெஞ்சில் மார்பு கூட்டு பகுதியில் 2 ம் காயத்தின் அருகில் காணப்பட்டது.

4) சிராய்ப்பு காயம் 4 X 0.5 செ.மீ அளவில் இடது கை நடுவிரலில் காணப்பட்டது.

5) சிராய்ப்பு காயம் 1X0.5 செ.மீ அளவில் இடது கை சுண்டு விரலில் காணப்பட்டது.

6) திறந்த, சிதைந்த காயம் 9X6X வயிற்றின் குடல் மற்றும் உள்ளுறுப்பு அளவிற்கு இடது பக்க வயிற்றில் காணப்பட்டது.

<u>உள்புற காயங்கள்</u>

1) விலா எலும்புகள் எலும்பு முறிவின்றி காணப்பட்டது.

2. இதய அறைகள் துளையிடப்பட்டு முழுவதும் காலியாக இருந்தது.

3) நெஞ்சு கூட்டு பகுதியில் 300 மிலி அளவிற்கு இரத்தம் காணப்பட்டது.

4) இடது நுரையீரல் துளையிடப்பட்டு வெளிறி காணப்பட்டது.

5) கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் வெளிறி காணப்பட்டது.

6) வயிறு துளையிடப்பட்டு 300 மிலி அளவிற்கு பாதி செரிமானமான உணவு துகள்கள் வயிற்று கூட்டு பகுதியில் காணப்பட்டது.

7) கபாலத்தில் எலும்பு முறிவு காணப்பட்டது.

8) மூளை மற்றும் ஐவ்வு பகுதி வெளிறி காணப்பட்டது.

நான் உள்ளுறுப்புகளை சேகரித்து நஞ்சியல் பிரிவிற்கு அனுப்பவில்லை.

மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்ட நெஞ்சு காயம், மற்றும் முக்கியமான உடல் உறுப்புகளில் ஏற்பட்ட காயங்களினால் உண்டான அதிர்ச்சி மற்றும் இரத்தப் போக்கினால் இறந்திருக்க கூடும் என சான்று வழங்கினேன். மேலும் இறப்பானது பிரேத பரிசோதனை செய்த நேரத்திலிருந்து 13 முதல் 15 மணி நேரத்திற்கு முன் நிகழ்ந்திருக்க கூடும் என கருத்து தெரிவித்துள்ளேன். அந்த சான்றிதழ் இதுதான். அது.அ.த.சா.ஆ.6. ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

3 செமீ அளவுள்ள கத்தியை எடுத்து குத்தினால் அந்த காயத்தின் அகலம் 3 செமீ அல்லது அதற்கு மேல்தான் அகலம் இருக்கும் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை முடித்த பிறகு என்னை ஆய்வாளர் ஒரு சில வாரம் கழித்து விசாரித்தார் என்றால் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.08.04 18:27:51 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.